
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



ஊக்கமும் திறமையும் உழைப்பும் இணைந்ததால்
ஆக்கம் பெற்ற அரிமா முழக்குநர்
கலைத்தந்தை வளர்த்த கதிசுந் தரனார்
நிலைத்த புகழுடன் நீடுவா ழியவே.

ஏப்ரல் 1996

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

குரல் 15

ஒலி 3

யுவ

பங்குனி

ஏப்ரல்

1996

நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடியும் திரிந்தும் காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்து
ஆடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே.

- திருநாவுக்கரசர்

ஆசிரியர்:
வி.என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
நடராஜ் அண்ணாமலை

துணை ஆசிரியர்:
எல்.சுந்தரம்

அலுவலகம்:
108–109, நேதாஜி ரோடு,
அறை எண் 12, மாடி
மதுரை – 625 001.

ஆண்டுச் சந்தா ரூ. 42–00

டெபாசிட் சந்தா ரூ. 300–00

கருமுத்து தியாகராசர்

அவரைப்போல் அன்புநெறி போற்றி வாழ்வோம்
அவரைப்போல் தமிழ்நூலைப் போற்றி வாழ்வோம்
அவரைப்போல் தமிழ்மொழியைக் காத்து வாழ்வோம்
அவ்ரைப்போல் கலைநுட்பம் அறிந்து வாழ்வோம்
அவரைப்போல் நல்உழைப்பை ஏற்று வாழ்வோம்
அவரைப்போல் துணிவுடைமை கொண்டு வாழ்வோர்
அவரென்றும் ஞானநெறி காட்டி நிற்பார்
அவர்மலர்த்தாள் வணங்கியிங்கே உயர்ந்து வாழ்வோம்

- பேராசிரியர் கதி. சுந்தரம்

மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

பெருஞானச் சுடர்க்கதிரோன் பீடு சான்ற
பேறுமிகு வளநூல்கள் படைத்த செம்மல்
அருமைமிகு உவமைகளை அருளும் அண்ணல்
அருந்தமிழை உலகறியச் செய்த தீரர்
திருவளரும் ஆய்வுநெறி செழிக்கச் செய்த
செந்தமிழின் பேராசான் திறமை மிக்கார்
குருவருளைப் போற்றுகின்ற கொள்கைக் கோமான்
குணம்மிகுந்த மாணிக்கர் நெறியில் வாழ்வோம்

- பேராசிரியர் கதி. சுந்தரம்

கனிந்த பேச்சுக்காரர்!

பணிவிடை விழாவில் (9-4-86) கதி. சுந்தரனார் பற்றி
முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள்

சிவந்த உடல் சிரித்தமுகம் சீர்த்த நோக்கு
செயலெதையும் தள்ளிவைக்கா தியற்றும் நேர்த்தி
உவப்புடனே எவரோடும் கனிந்த பேச்சு
உரமான தமிழ்மொழிப்பற் றுறுதி உள்ளம்
கவலையதன் நிழல்கூடப் படரா நெஞ்சம்
கடமைகளை முடிக்காமல் தூங்காச் சிந்தை
இவர்வாழ்வின் ஏற்றங்கள் இன்னும் உண்டு
இளமைக்குக் குடியிருப்பாய் என்றும் வாழ்வார்

(கதி சுந்தரனார் பணிவிடை விழாவிற்கு (9-4-86) கல்லூரித் தாளாளர் கருமுத்து திரு. தி. கண்ணன் அவர்கள் வருகை தந்து சிறப்பளித்தார்கள்)

அரிமா முழக்குநர் கதி. சுந்தரம்

வலையபட்டியில் 9-11-1927 இல் பிறந்த பேராசிரியர் கதி. சுந்தரம் அவர்கள் எளிமைக்கும் அடக்கத்திற்கும் எடுத்துக் காட்டானவர்கள். பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த இவர்களது தந்தையார் திரு. மு. கதிரேசன் செட்டியார். தாயார் திருமதி சாத்தம்மை ஆச்சி.

ஆசிரியர் பணி

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் கல்விபயின்று புலவர் பட்டம் பெற்ற இவர், வலம்புரி வடுகநாதன் உயர் நிலைப்பள்ளியில் ஓராண்டுக் காலமும் ஆ.தெற்கூர் ஸ்ரீ விசாலாட்சி கலா சாலையில் ஐந்து ஆண்டுகளும் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1954 முதல் மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றி 1986 ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

நாடகங்கள்

பேராசிரியர் திரு. கதி. சுந்தரம் பல நாடகங்களை எழுதியிருக்கிறார்; பல நாடகங்களை இயக்கி உள்ளார்; பல நாடகங்களில் நடித்தும் இருக்கிறார். 1958 ஆம் ஆண்டில் மதுரை தியாகராசர் கல்லூரியில் "இராஜராஜ சோழன்" நாடகத்தில் இராஜகுருவாக இவர் நடித்தபோது சிரித்த சிரிப்புத்தான் பட்டிமன்றங்களில் இவரது புகழ் வளர உதவியாக இருந்தது. இவரது அந்தச் சிரிப்பை பட்டிமன்ற ரசிகர்கள் மகிழ்ந்து வரவேற்றார்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் யோகி சுத்தானந்த பாரதியார் அவர்களும் அந்தச் சிரிப்பில் பெரிதும் கவரப்பட்டு மகிழ்ந்து இவரைப் பாராட்டியிருக்கிறார்கள். பி.ஏ. வகுப்பிற்குப் பாடம் எடுத்தபோது "மனோன்மணியம்" போன்ற நாடகங் களை மாணவர்கட்கு இவர் நடித்துக்



"இராஜராஜ் சோழன்" நாடகத்தில் இராஜ குருவாக பேராசிரியர் திரு. கதி. சுந்தரம் (தாடியுடன் இருப்பவர்) நடித்த காட்சி.

காட்டியே கற்பித்திருக்கிறார். இவரிடம் பயின்ற மாணவர்கள் இவரது நடிப்புத் திறனையும் தமிழ் மொழியை இவர் உச்சரிக்கும் பாங்கினையும் இன்றும் புகழ்ந்து கூறி வருகிறார்கள்.

பட்டங்கள்

பல நாடகங்களை இயக்கியதன் மூலம் துணைபுரிந்ததற்காகத் தமிழறிஞர் கருமுத்து திரு. தி. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்கள் இவரைப் பாராட்டியதோடு தியாகராசர் நன்முறைப் பள்ளி ஆண்டு விழாவில் இவருக்கு 'முத்தமிழ்மணி' என்ற பட்டத்தினை வழங்கினார்கள்.

மதுரைத் தமிழறிஞர்கள் ஒரு விழாவில் இவருக்கு 'அரிமா முழக்குநர்' என்னும் பட்டத்தை வழங்கியிருக்கிறார்கள்.

இவர் பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள், கவியரங்கங்கள் ஆகிய வற்றில் கலந்து கொண்டு பாராட்டுகளைப் பெற்றவர்.

1946 - 47ல் காரைக்குடியில் நடைபெற்ற திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் வென்று கம்பன் அடிப்பொடி அவர்களால் பாராட்டும் பரிசும் பெற்றிருக்கிறார்.

பொற்கிழிப் பரிசு

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் நடத்திய கவிதைப் போட்டியில் கலந்து கொண்டு அப்போதைக்கு அறிவித்த 'ஆடக மதுரை அரசு' என்ற தலைப்பில் கவிதை இயற்றி பொற்கிழிப் பரிசு பெற்ற பெருமைக்குரியவர் இவர். (இந்தப் பரிசினை சிலம்புச் செல்வர் திரு.ம.பொ.சி. அவர்கள் 31-1-76 அன்று வழங்கினார்கள்.)

முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் இயங்கிய தமிழகப் புலவர் குழுவில் இவர் 5.6 ஆண்டுக் காலம் உறுப்பினராக இருந்தார்.

கவிதை

"முத்தமிழ் மணி அவர்களே, கவிதைத் துறையில் தங்கள் வளர்ச்சி பற்றிக் கூறலாமா?"

"நான் பல பாடல்களைப் பாடியுள்ளேன். கோடை நாற்பது என்னும் என் நூல் வெண்பா யாப்பில் அமைந்தது.



மதுரை – இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தின் 12ஆம் ஆண்டு விழாவில் (1968) முத்தமிழ்க் காவலர் திரு.கி.ஆ.பெ. விசுவநாதத்திற்கு திரு. கதி. சுந்தரம் வாழ்த்து மடல் வாசித்தளிக்கும் காட்சி.

இந்நூல் தமிழ் அறிஞர்களின் பாராட்டுக்களைப் பெற்ற நூல். சிந்தனைச் செல்வர் கருமுத்து திரு. தி. சுந்தரம் செட்டியார் அவர்கள் இந்த நூல் வெளிவரப் பொருளுதவி தந்து உதவினார்கள். 1956ல் வெளிவந்த "ஆனந்த விகடன்" தீபாவளி மலரில் கன்னித் தமிழ் பாடும் கவிஞர் திருக்கூட்டத்தில் இடம் பெற்றேன். என் படத்தை ஆனந்த விகடன் வெளியிட்டு எனக்குப் புகழ் சேர்த்தது. புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த "பொன்னி" இதழ் பாரதிதாசனின் பரம்பரைக் கவிஞராக நாட்டிற்கு என்னை அறிமுகம் செய்து வைத்தது. கவிதைத் துறையிலும் பேச்சுத் துறையிலும் நான் வளர்ச்சி பெற ஊக்கமளித்து வரும் செயல்மிகு மாமணி வலையபட்டி டி.ஆர். அவர்களின் அன்பினை என்றும் போற்றுவேன்".

திருக்குறள்

"திருக்குறளைப் பற்றி உங்கள் கருத்தென்ன?"

"நான் விரும்பிப் படிக்கும் நூல்கள் திருக்குறள், சிலப்பதிகாரம், மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ், கண்ணதாசனின் தனிக் கவிதைகள் போன்றவை. வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும்; மன அமைதி பெற வேண்டும்; செம்மையாக வாழ வேண்டும் என யார் விரும்புகிறார்களோ அவர்கள் திருக்குறளைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். மனித வாழ்க்கையை உயர்த்துவதற்குத் திருக்குறள் மிக மிகத் துணையாக இருக்கிறது. திருக்குறளை நன்கு கற்று அதன்படி நடக்க முற்படுகிறவன் வாழ்க்கையில் வருகின்ற எந்தச் சிக்கலையும் எளிதாகச் சமாளித்து விடுவான்"

குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி

"தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளில் ஒன்றினைக் கூறலாமா?"

"நகரத்தார் குரல்" ஆசிரியர் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிடி. அவர்களின் மணிவிழா வரலாற்றுப்புகழ் வாய்ந்தது. அன்று இராங்கியத்தில் தமிழகமே ஒன்று கூடியிருந்த காட்சி மனதிற்கு மகிழ்ச்சியையும் நிறைவையும் தந்தது. வலையபட்டி நகரத்தார்களாகிய நாங்கள் ஒன்றாகச் சென்று மணி விழாவைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்தினோம். பின்னர் வி.என்.சிடி. அவர்கள் வலையபட்டி யூனியன் கிளப்பிற்கு வந்து



திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் நடைபெற்ற செங்கோல் விழாவில் (இ.வ) திரு. எஸ். முத்துக்கருப்பன் செட்டியார். திரு. ஆர்.எம். முத்தழகப்ப செட்டியார் கலைமகள் திரு. நடராஜன் செட்டியார் திரு. தி. கனகசபை செட்டியார் ஆகியோருடன் திரு. கதி.சுந்தரம்.



பட்டிமன்றம் ஒன்றில் (இ–வ) திருவாளர்கள் கண.சிற்சபேசன், கதி. சுந்தரம், சொ.சொ.மீ. சுந்தரம், துரைராஜ், முனைவர் நா. பாலுசாமி.

அன்பு நிறைந்த நன்றியைத் தெரிவித்தது நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் நிகழ்ச்சியாகும்".

குடும்பம்

திரு. கதி. சுந்தரம் அவர்களுக்கு மீனாட்சி ஆச்சி என்கிற மனைவியும் திரு. கதிரேசன், திரு. சொக்கலிங்கம் என இரு புதல்வர்களும் திருமதி. மீனாட்சி முத்தப்பன் என்கிற புதல்வியும் உள்ளனர். திரு. கதிரேசன் சென்னை மாக் சிவில் இன்ஜினீயர்ஸ் நிறுவனத்தில் பொறி யாளராகப் பணியாற்றி வருகிறார். திரு. சொக்கலிங்கம் மதுரைவங்கியின் கல்கத்தா கிளையில் பணியாற்றி வருகிறார்.

தன்னுடைய மூன்று மக்களின் திருமணங்களில் கலந்து கொண்டு தலைமை ஏற்று வாழ்த்துரை வழங்கிய 'திருப்பணிச் செம்மல்' கருமுத்து திரு. சு. சொக்கலிங்கம் செட்டியாரின் பேரன்பினைப் போற்றுவதாகக் கூறுகிறார், முத்தமிழ்மணி.

மாணவர்கள்

முன்னாள் அமைச்சர் முனைவர் திரு. கா. காளிமுத்து கவிஞர்கள் திரு. நா. காமராசன் திரு. மு. மேத்தா திரு. அப்துல்ரகுமான். திரு. மீரா திரு. அவ்வை நடராசன். திரு. சாலமன் பாப்பையா முனைவர் திரு. ச.மெய்யப்பன். முனைவர் திரு. இராம. சுந்தரம் திரு. எம்.எஸ்.ஆர்எம். மெய்யப்பன் ஆகியோர் இவரது மாணாக்கர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சில செய்திகள்

திரு. கதி. சுந்தரம் சந்திப்பின் இறுதியில் கூறிய சில செய்திகள்:

கருமுத்து குடும்பத்தாரின் கருணை உள்ளத்தைப் போற்றுகிறேன்.

தியாகராசர் கல்லூரி என்னும் கலைக் கோவிலை வணங்குகிறேன்.

என் மாணவர்கள் அனைவரின் அன்பைப் போற்றி வாழ்த்துகிறேன்.

எல்லாம் வல்ல இறைவனின் திருவருளால் என் ஆசிரியர் பணியை வெற்றிகரமாக முடித்து மனநிறைவோடு வாழ்ந்து வருகிறேன்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்று எங்கும் முழங்குவோம்.

சந்திப்பு: எல்.சுந்தரம்.

முத்தமிழ்மணி, கதி. சுந்தரம்

(முத்துநல்லப்பன் வலையபட்டி)

நானும் நண்பர் கதி. சுந்தரம் அவர்களும் ஒரே ஊர்க்காரர்கள். ஒரே வயதினர். பங்காளிகள்.

நான். சுந்தரம். வே. அண்ணாமலை மூவரும் 1943ம் ஆண்டு பாலசுப்ரமணிய பிள்ளை என்ற பெருமகனாரிடம் தமிழ்ப் பாடம் பயின்றோம். ஓய்வு நேரங்களில் எங்கள் ஊர்க் கச்சேரிக் கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்போம். பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்றதன் தொடர்ச்சியாக எனக்கு ஒரு யோசனை தோன்றியது. "நாம் மூவரும் ஏன் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் புலவர் வகுப்பில் சேர்ந்து படிக்கக்கூடாது" என்று கேட்டேன். சுந்தரம். அண்ணாமலை இருவரும் ஏற்றுக் கொண்டார்கள். வலயபட்டியிலிருந்து சாப்பாடு கட்டிக் கொண்டு தினமும் மேலச்சிவபுரிக்கு நடந்து போய்ப் படித்து வந்தோம். அப்போது முதலில் பி.ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் பிறகு இரண்டொரு மாதத்தில் இராமநாதன் செட்டியார் அவர்களும் கல்லூரி முதல்வராக இருந்தார்கள். இடையிலே எனக்குத் திருமணம் நடந்துவிட்டபடியால் நான் முழுமையாகப் புலவர் வகுப்பை முடிக்கவில்லை. நண்பர்கள் கதி. சுந்தரமும் வே. அண்ணாமலையும் முழுமையாக முடித்து. முதல் வகுப்பில் தேறி. பல ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்கள்.

1952 வாக்கில் கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் அவர்களைப் பார்க்க நான் கோடைக்கானல் சென்றிருந்தேன். அங்கு கதி. சுந்தரம் அவர்கள் இருந்தார்கள். என்னை அறிமுகப்படுத்திவிட்டு "நான் தமிழ் படித்து இந்த நிலைமையில் இருப்பதற்கு முத்து நல்லப்பன்தான் காரணம்" என்றார்கள். அவர்களது நன்றி உணர்ச்சியை தி. சுந்தரம் செட்டியார் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள். நான் மெய் சிலிர்த்துப் போனேன்.

நான் சொ. முருகப்பா அவர்களிடம் பணியாற்றியபொழுது சுந்தரம் அடிக்கடி அமராவதிபுதூர் மகளிர் இல்லம் வருவார். சொ.முரு. அவர்கள் சுந்தரத்தின் தமிழ்ப் புலமையை வெகுவாகப் பாராட்டுவார்கள்.

அத்தகையை நண்பர் கதி.சுந்தரம் அவர்கள் பற்றி "நகரத்தார் குரல்" சிறப்பிதழ் வெளியிடுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்த்து

ஊமையராய்ச் செவிடர்களாய் குருடர்களாய்
வாழ்கின்றோம் சேமமுற வேண்டு மெனில்
தெரு வெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்

- சுப்பிரமணிய பாரதியார்

தமிழ்த் தொண்டர் 'முத்தமிழ்மணி' கதி. சுந்தரனார் - மீனாட்சி ஆச்சி எண்பதும் நூறும் கண்டு மகிழ்ந்து இனிது வாழ வாழ்த்தும்.

கங்கை – காவேரி வாணிகத் தொடர்பு
ஓம் முருகா வாணிகம்,
4 மகால் முதல் தெரு, மாடி, மதுரை – 625 001.



எம் ஆசான், முத்தமிழ் மணி
க (ம்பர்) தி (ருவள்ளுவர்) சுந்தரனார் வாழ்க!

(முனைவர் கு. ஞானசம்பந்தன்)
(தமிழ்ப்பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை)

தமிழகத்தின் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களின் பழைய மரபினைச் சார்ந்த 'முத்தமிழ்மணி' திரு. கதி. சுந்தரனார் குறிப்பிடத்தக்கவர் ஆவார். குரல் வளத்தால் குறள் வளத்தால் மேன்மை யுற்றவர். கதி. சுந்தரனார் அவர்களின் பெயருக்கு முன்னால் உள்ள 'க' என்னும் எழுத்து. கம்பரையும். 'தி' என்னும் எழுத்து. திருவள்ளுவரையும் குறிப்பதாக இருக்க வேண்டும். தமிழுக்கு இவர் 'கதி'யாக இருப்பதால் கதி. சுந்தரனார் ஆனார். என அருட்செல்வர் 'மீனாட்சி திருமைந்தன்' வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் இவரை எப்பொழுதும் தமிழ் உணர்வு தழைக்கப் பாராட்டி மகிழ்வார்கள்.

எனக்கு மட்டும் இல்லை; இன்றைக்குத் தமிழகப் பேச்சுலகின் பெரும் மன்னர் களாய்த் திகழ்கின்ற கா. காளிமுத்து. அவ்வை நடராசன், சாலமன்பாப்பையா போன்றோர்க்கும் தமிழகத்தின் 'கவிக்கோ' வாகத் திகழ்கின்ற அப்துல்ரகுமான். மு. மேத்தா மீரா போன்றோர்க்கும் பல அரசியல் மேதைகளுக்கும் தொழில் அதிபர்கட்கும் இவர் தியாகராசர் கல்லூரியில் தமிழ் ஆசான் என்பது வரலாற்றுச் சிறப்புடையதாகும். எளிமை யும் உறவு மனமும் இவர்தம் தனித் தன்மைகள். பட்டிமன்ற வரலாறு தமிழகத்தில் எழுதப்படுமானால், அதில் இவருக்குத் தனி இடம் . உண்டு. பீஷ்மரின் சிறப்புக்களைப் பற்றி, பட்டிமன்றத்தில் இவர் முழங்கிய முழக்கத்தை இன்றைக்கும் தமிழ் அறிஞர்கள் போற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அமரர் குன்றக்குடி அடிகளார் அவர்கள் இப்புலவர் பெருமானின் நடிப்பிசை ஆற்றலைக் கண்டும் கேட்டும் வியந்து மெய்மறந்து பட்டிமன்றத்தில் மணி ஒலிக்கச் செய்ய மறந்ததும் உண்டு. கல்லூரி நாட்களில் அரு. இராமநாதனின் 'இராசராசசோழன்' நாடகத்தில் சிங்கமென முழங்கி. செந்தமிழ் அவையின் பெரும் பாராட்டுகளைப் பெற்றவர் இவர்.

கார் நாற்பது - களவழி நாற்பது என்னும் நூல்வகையில் 'கோடைநாற்பது' பாடிய குரிசில். மேடைகளில் 'அரிமா முழக்குநராக' முழங்கினாலும் வகுப்பறை களில் நகைச்சுவைத் தென்றலாக உலா வருவார். திரைப்படத்தைத் தவற விட்டாலும் விடுவார்களே தவிர. மாணவர்கள் இவரின் வகுப்பறையைத் தவற விட மாட்டார்கள்.

ஒவ்வொரு மாணவரையும் பெயர் சொல்லி அன்பாக அழைப்பார். அவர்களுக்கு உதவிகளும் செய்யும் உத்தமர். நான்கு தலைமுறைகளாகத் தமிழ்ப் பணியாற்றி வரும் நரை திரை இல்லாத பிசிராந்தையார். தமிழ் மொழி போல் - சீர் இளமை குன்றாமல் சிறப்புடன் வாழ்பவர். இச்சான்றோரின் புகழ் வாழ்க!

செந்தமிழ்த் தாயின் சிறப்பினைப் போற்றும் எம் சுந்தரனார் வாழ்க! சுகம்

முத்தமிழ் மணி

(இராம. விசுவநாதன், நெற்குப்பை)


பண்டிதமணி - முதுபெரும் புலவர் - கதிரேசனார் வழி வந்தவர் எம். ஆசான் முத்தமிழ்மணி கதி. சுந்தரனார்.

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் - கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் பண்புள்ள மாணவராக ஐந்தாண்டுகள் செம்மையாகப் பயின்று 'வித்வான்' (புலவர்) பட்டம் பெற்றவர்கள்.

1948-ஆம் ஆண்டிலிருந்து வலம்புரி வடுகநாதன் உயர்நிலைப்பள்ளி (பொன்னமராவதி) விசாலாட்சி கலாசாலை. (ஆ. தெக்கூர்) தியாகராசர் கலைக்கல்லூரி (மதுரை) ஆகியவற்றில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய பெருமகனார்.

இவரிடம் படித்த என் போன்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தமிழைக் கற்றதோடு. தமிழ்-தாய்மொழி உணர்வையும் பெற்றார்கள். இன்றும் என்றும் தமிழ் உணர்வு - தாய்மொழி உணர்வு தழைக்க வித்திட்ட ஆசானாகிய கதி. சுந்தரனாரையும். அவருக்கு வழி காட்டியாக விளங்கிய முதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனாரையும் எம் போன்ற மாணவர்கள் நினைத்தல் இயல்பேயாகும். எம் இனிய நல் இப் பேராசான்கள் உலகினை உய்த்து உணரும்படி எம் போன்ற மாணவர்களுக்கு கல்வி பயிலுங்கால் எடுத்துரைத்தார்கள். "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."

கல்விக் கொடை வள்ளல் கருமுத்து தியாகராசர் குடும்பத்தார் முத்தமிழ் மணியை தமிழின்பால் கொண்ட காதலால் ஆதரித்தார்கள். தியாகராசர் கலைக் கல்லூரியில் தமிழ்ப்பணி ஏற்றது முதல் ஓய்வு பெற்று. இன்றும் தமிழ்ப்பணி யாற்றி வரும்போதும். கருமுத்து குடும்பத் தாரையும். தமிழையும் இருகண்களாகக் கொண்டு உலகினை மதிப்பவர். (கம்பர். சடையப்பர். இராமகாவியம் நினைமின்)



எழுபது அகவையிலும அகததால் அழகு நிறை இளைஞர். உடலாலும் கத்திப்பிடி போன்ற வாகுடையார்.

நல்ல மனைவி மனைமாட்சி மீனாட்சி ஆச்சி. மற்றதன் நன்மக்கள் கதிரேசன். சொக்கலிங்கம். மீனாட்சி. செம்மை சால் வாழ்க்கை - எளிமையின் ஏற்றம் - இவையே அவர்தம் குடும்பச் சிறப்பு.

கதி. சுந்தரனாரின் அருங்குணம் யாதெனின்: அவரிடம் கல்வி கற்ற மாணவர் குழாத்தை நினைந்து. நினைந்து. அவர்கள் தம் சீரான முன்னேற்றம் கண்டு தமிழ் முன்னேற்றமாகக் கொண்டு மகிழ்பவர்.



மதுரையில் 19-2-96 அன்று நடைபெற்ற ஏ.ஜி.எஸ். சோசியல் அகாடமி விருது வழங்கும் விழாவில் சிறந்த சமூக சேவைக்கான விருதை டாக்டர் திரு. என்.என். கண்ணப்பனுக்கு இரயில்வே டிவிஷனல் மேனேஜர் திரு. குப்தா வழங்கினார். அருகே திரு. ஏ.ஜி.எஸ். ராம்பாபு.

தமிழ்நாடு அனைத்துச் செட்டியார்கள் பேரவைக் கூட்டம்

தமிழ்நாடு அனைத்துச் செட்டியார்கள் பேரவையின் கூட்டம் 25-2-96 அன்று மதுரை நியூ காலேஜ் ஹவுசில் திரு. பி.ஆர் ஜெகந்நாதன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது.

அப்போது மதுரை நகரப் பேரவைக்கு திரு.வி.என். சிதம்பரம் செட்டியார் தலைவராகவும் திரு. என். மணிமொழியன் மூத்த துணைத் தலைவராகவும் திரு. ஓ.கே. பாலசுப்ரமணியன். திரு.எம். பொன்னையா செட்டியார் இருவரும் துணைத்தலைவர் களாகவும் திரு.ஆர். சொக்கலிங்கம் பொதுச் செயலாளராகவும் திரு. பாஸ்கரன் திரு.எஸ்.கே.டி. சண்முகம் திரு.கே. சுப்பராஜ். திரு. எஸ்.எம்.ஆர். குணசேகரன் ஆகிய நால்வரும் இணைச் செயலாளர்களாகவும் திரு. ஆர். பாலசுப்ரமணியன் பொருளாளராகவும் திருவாளர்கள் போத்திராஜ். சேவுகமூர்த்தி. சுப்ரமணியன் கணேசன். ருக்மணி ஆகியோர் நிர்வாகக் குழுவிற்கும் திரு. ஸ்ரீதர் அலுவலகப் பொறுப்பாளராகவும் ஏக மனதாகத் தேர்வு செய்யப் பெற்றனர்.

வெவ்வேறு பெயர்களில் உள்ள செட்டி குலப் பெருமக்கள் தமிழ்நாடு அனைத்துச் செட்டியார்கள் பேரவையில் ஒன்று சேர்ந்து தன்மானத்தைக் காக்கவும் பொது நன்மைக்காக. மேம்பாட்டுக்காக உழைக்கவும் தயாராகி வருகிறார்கள். உயர்ந்த இலட்சியங்கள். உன்னதமான குறிக்கோள்களுக்காக ஒன்றுபட்டுக் குரல் கொடுக்கவும் அன்பு வழியில். அறவழியில் போராடவும் இந்தப் பேரவை அமைக்கப் பெற்றுள்ளது. திருமணம் மற்றும் குடும்ப நிகழ்ச்சிகள் வழக்கம் போல் அவரவர் பிரிவுக்குள் மட்டும் நடைபெறும்.

செட்டிநாட்டு அரசரின் பண்பு

செட்டிநாட்டுக்காரர்கள். குலத்தால் வைசியர்கள். ஆதலால். வாணிபமே எங்களின் வாழ்க்கை.... அதிலும். நகரத்தாரில் பெரும்பாலோர் வெளி நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்வதிலேயே ஈடுபட்டிருந்தோம். வாணிபம் என்றால். வெளிநாடுகளில் போய் நிரந்தரமாகத் தங்கி வியாபாரம் செய்வதில்லை. நம்நாட்டில் விளையும் பொருட்களில் மலேயா. சிங்கப்பூர். பர்மா போன்ற நாடுகளில் வாழும் மக்கள் விரும்புவனவற்றைக் கொண்டு கொடுத்து. அந்த நாட்டுப் பொருட்களில் நம் நாட்டு மக்களுக்குத் தேவையானவற்றை வாங்கி வருவதுதான் இவர்கள் செய்த வாணிபம். ஏறக்குறைய பண்டைய காலத்து பண்டமாற்று முறையைப் போன்றது. இதை. 'கொண்டு விற்கப் போகிறோம்' என்பார்கள். இப்படி நகரத்தார் வியாபார நிமித்தமாகச் சென்ற இடங்களிலும். தங்கள் பூர்வீக ஊர்களிலும் ஆலயங்களை ஏராளமாக நிறுவினார்கள். தான தர்மங்கள் செய்வதைக் கூட ஆலயங்கள் மூலமாகச் செய்தார்கள். ஆலயங்கள் நிறுவுவதில் அதிகமான கவனம் நகரத்தார் செலுத்தியதற்குக் காரணம். ஆலயங் களில்தான் மனிதப் பண்பை வளர்க்க முடியும் என்ற நம்பிக்கையே!

பிற மதத்தினர் அதிகமாக வாழும் மலேயா. சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் 150. 200 ஆண்டுகளுக்கு முன்பே பெரிய ஆலயங்களை நிர்மாணித்து. அந்த ஆலயங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு மாதம் திருவிழா நடத்தினார் கள். அந்தத் திருவிழாக்களில் சமபந்தி போஜனம் நடத்தியபோது. உணவு சமைப்பது. பரிமாறுவது. எச்சில் இலை எடுப்பது போன்ற காரியங்களையும் இந்தச் செல்வந்தர்களே செய்தார்கள். ஒருவன் எச்சில் இலை எடுக்கும்போது. பணிவு தானாக வந்துவிடுமல்லவா! அதனால் அந்த செல்லப் பிள்ளைகளுக்குப் பணிவு இயல்பாகவே இதன் மூலம் வந்தது. அதோடு. இதுபோன்ற சமபந்தி போஜனத்தில் எல்லா மதத்தினர்களும் சகோதரர்களாய்ப் பழகும் வாய்ப்பும் உருவானது. இப்படி ஆலயங்களை மனிதர்களிடம் பண்பு வளர்க்கும் பள்ளிகளாய் மாற்றினார்கள். இந்தப்



பொதுப் பண்பு சாதாரண வணிகர்களிடம் மட்டுமல்ல: செட்டி நாட்டு அரசரிடம் கூட ஊறிப் போயிருந்தது...

தங்கள் வீட்டில் நடக்கும விசேடங்களுக்கு வரும் தனது கார் டிரைவர். பணியாளர்களைக் கூட உறவுக்காரர்களைப் போல் கூட இருந்து உணவு பரிமாறி. அவர்களை வாசல்வரை வந்து வழி அனுப்புவார்கள் ராஜா குடும்பத்தினர். அதேபோல் கோவில் விழாக்களில் முதல் மரியாதை ராஜா குடும்பத்தினருக்கு என்றாலும். அது சமயம் அங்கு வயதில் மூத்த செட்டி

நாட்டுப் பெரியவர் யாராவது இருந்தால் அவர்களுக்கே முதல் மரியாதை கொடுப்பார்கள்.

ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் குமார ராஜாவாக இருந்தபோது, வாணிபப் பயிற்சி பெறுவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, அவர்கள் நிறுவனத்தின் மானேஜர் சொல்கிறபடிதான் நடப்பாராம். "பிறப்பால் குமார ராஜாவானாலும் தொழிலில் மானேஜர்தான் குரு என்பதால் அவரிடம் ஒரு சீடனைப்போல் பணிவாக நடந்தால்தான் தொழில் கற்றுக் கொள்ள முடியும். எனவே, அவரை மதிப்பதுதான் பண்பு" என்று ஒருமுறை ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னார்கள்.

அப்படியானால் நாங்களெல்லாம் எவ்வளவு பணிவு காட்டி இருப்போம் என்று சொல்ல வேண்டுமா என்ன? அந்தப் பணிவும். அடக்கமும் எனக்கு என் தந்தையால் நான்கு வயதாக இருக்கும்போதே போதிக்கப்பட்டது.... காலைக்கடன் முடித்து குளித்துவிட்டு, என் பாட்டனார் கட்டிய பிள்ளையார் கோவிலுக்குப் போய் சாமி கும்பிட்டு விட்டு வந்தால்தான் வீட்டில் டிபனே கிடைக்கும்..... அதனால் இறைஉணர்வு இயல்பாகவே என்னிடம் அமைந் திருந்தது. அது நான் மீனாட்சி கோவில் அறங்காவலராகப் பொறுப் பேற்றபோது எனக்குப் பெரிதும் உதவியது.

அறங்காவலர் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் ஆலய சிவாச்சாரியார்கள் சார்பில் எனக்கொரு பாராட்டுக் கூட்டம் நடத்தினார்கள். அதில் கலந்து கொண்டு நான் பேசும்போது, செட்டிநாட்டுக்காரர்கள் வழக்கப்படி சிவாச்சாரியார்களை 'சுவாமி' என்றே அழைத்தேன். அப்படி ஏன் அழைக் கிறேன் என்பதற்கு விளக்கமும் சொன்னேன். "மந்திரி பதவி என்பது நிலையில்லாப் பதவி. அப்படிப்பட்ட பதவியில் இருக்கும் ஒருவரின் பி.ஏ.யை. 'சார்...சார்' என்று அழைக்கின்றோம். மரியாதை கொடுக்கிறோம். அப்படியிருக்கும்போது ஆண்டவன் என்ற நிலையான பதவியில் இருக்கும் தெய்வத்துக்கு நிலையாகப் பணிவிடைகள் செய்யும் சிவாச்சாரிகளை இறைத் தூதுவர்களாக - சுவாமிகளாக மதிப்பதும், 'சுவாமி' என்று பவ்யமாக அழைப்பதும் தவறல்லவே" என்று விளக்கம் சொன்னேன். சிவாச்சாரியார்கள் மகிழ்ச்சியால் உளம் நெகிழ்ந்து போனார்கள். நான் பதவியிலிருந்த ஒன்பதாண்டு காலமும் எனது பணிகள் சிறப்பாக அமைய ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். இப்படி மூத்தோரை பக்திப் பணிகளில் ஈடுபட்டிருப்போரை மதித்தால் நல்லது நடக்கும் என்று உணர்ந்துதான் சிறுவயதிலேயே இந்தப் பழக்கங்களை எங்கள் முன்னோர் எங்களுக்கு வழங்கினார்கள். அந்தப் பணிவுதான் எங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது.

(திரு. வி.என். சிதம்பரம் எழுதிய "நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்" நூலிலிருந்து)

சென்னையில் திருவிளக்குப் பூஜை

சென்னை வடபழநி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பாக 3-5-96 (வெள்ளி) சித்ரா பௌர்ணமி அன்று மாலை 6 மணிக்கு வடபழநி ஜீவன்ராயர் கல்யாண மண்டபத்தில் 108 பெண்கள் கலந்து கொள்ளும் திருவிளக்குப் பூஜை நடைபெற உள்ளது என்றும் ரூ 101/- கட்டணம் செலுத்தி கலந்து கொள்பவர் களுக்கு மட்டும் திருவிளக்கு, தாம்பாளம் மற்றும் பூஜைப் பொருட்கள் வழங்கப்படும் என்றும் தலைவர் திரு. எஸ்.பி. பழனியப்ப செட்டியார் அறிவித்துள்ளார்.

மணி விழா

சிங்கப்பூர் ருத்ர காளியம்மன் கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவரும் சிங்கப்பூர் திருமுறை மாநாட்டுக் குழுவின் துணைத் தலைவரும் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகப் பேராசிரியருமான தேவகோட்டையைச் சேர்ந்த முனைவர் திரு. இராம. கருணாநிதி - திருமதி அலமேலு ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 8-3-96 அன்று தேவகோட்டை இராம ஏகம்மை திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மணி விழாவை ஒட்டி தொழிலதிபர் திரு.லெ.நா. தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. தொழிலதிபர், இலக்கிய ஆர்வலர் திரு. கும.நா.சுப.நா. இராமசாமிச் செட்டியார், முனைவர் திரு. தமிழண்ணல், முனைவர் திரு. சுப. அண்ணாமலை, முனைவர் திரு. அர. சிங்காரவடிவேலன் திரு. சொ.சொ.மீ. சுந்தரம், காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன், திரு. இராம. விசுவநாதன் கவிஞர் திரு. சிவல்புரி சிங்காரம் ஆகியோர் மணி விழாத் தம்பதியரின் அன்புள்ளத்தை, பண்பு நலன்களை, தொண்டுகளைப் பாராட்டிப் பேசினர்.

முன்னதாக திரு. சிவசாமி தேசிகர் இறைவணக்கம் பாட திரு. கரு. கணேசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மணி விழா மலரை ‘அறமனச் செம்மல்’ திரு. கும.நா.சுப.நா. இராமசாமிச் செட்டியார் வெளியிட ‘அறமனச் செம்மல்’ திரு. நாக. ராம. இராமசாமிச் செட்டியார் பெற்றுக் கொண்டார். மணிவிழா நாயகர் முனைவர் திரு. இராம. கருணாநிதி நன்றி கூறினார்.

சிங்கப்பூரிலிருந்து வந்திருந்த சிவாச்சாரியார்கள் பலர் இம் மணிவிழாவில் பங்கு பெற்றனர்.



அண்மையில் வயிரவன் கோவிலில் திருக்குட நன்னீராட்டு விழாவை ஒட்டி நடைபெற்ற யாகசாலைக்கு வலைய பட்டியைச் சேர்ந்த திரு. ந.கரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் பெரும் நிதி நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள்.

'பழம் நீ' பாதயாத்திரைக் குழு:பட்டமளிப்பு

பழநிப் பாத யாத்திரையில் பங்கு பெற்று நல்ல முறையில் தொண்டாற்றும் அன்பர்களுக்கு 'அருள் நெறித் தொண்டர்' என்றும் பக்திப் பாடல்களைப் பாடும் அன்பர்களுக்கு 'அருளிசை மணி' என்றும் மதுரை பழம்நீ பாதயாத்திரைக் குழு, பழம்நீ அறக் கட்டளையின் சார்பாக கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பட்டங்கள் அளித்துப் பாராட்டப் பெறுகிறது.

அந்த வகையில் 1995 ஆம் ஆண்டுக்கு, 6-1-96 அன்று மதுரை நகர விடுதியில் நடைபெற்ற விழாவில் திரு. ஆறு.சுப. ஆறுமுகம் செட்டியார் (மேலைச் சிவபுரி), திரு. கு. நவநீதகிருஷ்ணன் (பரமக்குடி), திரு. சொ. பழநிமலை (கண்டனூர்) ஆகியோருக்கு 'அருள் நெறித் தொண்டர்' என்றும் - திரு. எஸ். முத்துக்குமார் (மானகிரி), திரு. மு. வீரப்பன் (கோட்டையூர்) திருமதி. இராசலெட்சுமி (காரைக்குடி) ஆகியோருக்கு 'அருளிசை மணி' என்றும் பட்டங்கள் வழங்கப்பெற்றன.

நகரத்தார் பெண்களுக்கு வேலைவாய்ப்பு!

காரைக்குடி அழகப்பாபுரத்தில் உள்ள அழகப்பா மாண்டிஸோரி விடுதியில் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பான வேலைக்கும், குழந்தைகளுக்கான வேலைகளைச் செய்வதற்கும் நகரத்தார் பெண்கள் தேவை.

கல்வித் தகுதி – எட்டாம் வகுப்பில் தேர்ச்சி

வயது வரம்பு – 20 முதல் 45 வயது வரை

கணவனை இழந்தோர், பெற்றோர் அல்லது கணவனின் ஆதரவை இழந்தோர், தனியாக வசிக்கும் பெண்களும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளத்துடன் உணவு, பராமரிப்புச் செலவு இலவசம். வேலைக்கான விவரங்களுக்கு வார்டனை நேரில் அணுகலாம்.


டாக்டர் உமையாள் இராமநாதன்
செயலர்
அழகப்பா கல்வி அறநிலை

91/1

உ

நல்லதே நடக்கும்

வட இந்திய சுற்றுலா & காசி யாத்திரை



14–4–96 முதல் 17 நாட்கள்

டெல்லி - ஜெய்ப்பூர் - பதேபூர்சிக்ரி - ஆக்ரா - மதுரா - சிக்கந்ரா - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - காசி - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 3950/-

கல்கத்தா - பம்பாய்

17–4–96 முதல் 11 நாட்கள்

சென்னை - கல்கத்தா - பூரி - புவனேஷ்வர் - கொனார்க் - பம்பாய் - சோலாபூர் - பண்டரிபுரம் - மந்த்ராலயம் - சென்னை. நபர் 1-க்கு ரூ. 2750/-

பஞ்ச துவாரகை

17–4–96 முதல் 15 நாட்கள்

சென்னை - அகமதாபாத் - கோமதிதுவாரகை - பேட்டிதுவாரகை - ஸ்ரீநாத்துவாரகை - டாக்கூர்துவாரகை - சோமநாதம் - போர்பந்தர் - உதய்பூர் - விராவல் - அஜ்மீர் - ஜெய்ப்பூர் - புஷ்கரம் - சென்னை. நபர் 1க்கு ரூ. 3700/-

1–5–96 & 18–5–96 முதல் 15 நாட்கள் காசி யாத்திரை

டெல்லி - ஆக்ரா - மதுரா - சிக்கந்தர் - பிருந்தாவன் - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - காசி - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி). நபர் 1க்கு ரூ. 3600/-

பத்ரிநாத் - கேதார்நாத் - காசி

6–5–96 முதல் 21 நாட்கள்

டெல்லி - ஆக்ரா - சிக்கந்ரா - மதுரா - பிருந்தாவன் - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - தேவபிரயாகு - ருத்ரபிரயாக் - கௌரிகுண்டு - கேதார்நாத் - ஜோசிமத் - பத்ரிநாத் - காசி - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 4350/- இதில் கல்கத்தா - பம்பாய் சேர்த்து 25 நாட்கள். நபர் 1க்கு ரூ. 5250/-

மேலும் நேபாள் சேர்த்து 29 நாட்கள் நபர் 1க்கு ரூ. 6050/-

சிம்லா ஸ்பெஷல்

18–5–96 முதல் 11 நாட்கள்

டெல்லி - ஆக்ரா - சிக்கந்ரா - மதுரா - பிருந்தாவன் - சண்டிகார் - குப்ரி - சிம்லா - டெல்லி நபர் 1க்கு ரூ. 2750/-

கட்டணங்கள் யாவற்றிலும் தூங்கும் வசதி இரயில் கட்டணம், மூன்று வேளை ஆகாரம், காலை மாலை, காபி, ஊர் சுற்றிப் பார்க்கும் பஸ் செலவு, தங்கும் செலவு ஆகியவை அடங்கும். LTC, LFC சர்ட்டிபிகேட் வசதி உண்டு. முழு விபரங்களுக்கு

ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி

9, வடக்காவணி மூல வீதி, மதுரை - 1. போன்: 624168

கோட்டையூரில் பள்ளி நிறுவனர் தின விழா

கோட்டையூர் முத்தையா அழகப்பா மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளியின் நிறுவனர் தின விழா. 24-2-96 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி.என். சிடி. அவர்கள். பள்ளியின் என்.சி.சி. மாணவர் படையின் அணிவகுப்பு மரியாதையுடன் மேடைக்கு அழைத்து வரப்பெற்றார்கள். விழாவிற்கு பள்ளியின் தாளாளர் திரு. சுப. சுந்தர கேசரி தலைமை வகிக்க, அவர்தம் துணைவியார் திருமதி. மீனா சுந்தரகேசரி முன்னிலை வகித்தார். பள்ளியின் முதல்வர் திரு. பாலசுப்ரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார். துணை முதல்வர் திருமதி. மீனா பாலச்சந்திரன் ஆண்டறிக்கை வாசித்த போது பள்ளி மாணவ, மாணவியரின் பல்வேறு சாதனைகளையும் கடந்த ஆண்டில் ப்ளஸ் டூ தேர்வில் நூறு சதவிகிதம் மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றதையும் விளக்கினார்.

திரு. சுப. சுந்தரகேசரி தமது தலைமை உரையில் சிறப்பு விருந்தினரான வி.என். சிடி அவர்களது சிறப்புக்களையும், மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் அவர் செய்துள்ள சாதனைகளையும் விளக்கி, கலை, இலக்கியம், அரசியல், ஆன்மீகம், வாணிகம், திரை உலகம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் திரு. வி.என். சிடி அவர்களைத் தெரியாதவர்களே இருக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

திரு. வி.என். சிடி. அவர்கள் சிறப்புரையாற்றுகையில் பள்ளியின் இறுதித் தேர்வுகளில் மாணவர்கள் 100 சதவித் வெற்றி பெற்று வருவதையும் பள்ளி நிறுவனரான திரு. எம்.ஏ. அழகப்ப செட்டியார், அவர்தம் புதல்வர்கள் திரு. ஏ.எல். முத்தையா, திரு. ஏ.எல். அண்ணாமலை ஆகியோர் அளித்து வரும் பல இலட்சக்கணக்கான ரூபாய் நன்கொடையினையும் பாராட்டிப் பேசினார்.

தலைமை ஆசிரியை திருமதி எம். வள்ளியம்மை நன்றி நவின்றார். பின்னர் மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



திரு. வி.என்.சிடி. சிறப்புரையாற்றுகிறார். அருகே பள்ளியின் தாளாளர் திரு. சுப. சுந்தரகேசரி, திருமதி மீனா சுந்தரகேசரி பள்ளி முதல்வர் திரு. பாலசுப்பிரமணியன்

சரித்திரத்தை மாற்றியவர் கருணாநிதி

சிங்கப்பூரிலிருந்து சிவாச்சாரியார்களை அழைத்து வந்து சரித்திரத்தையே மாற்றியவர் மணிவிழா நாயகர் திரு. இராம. கருணாநிதி. கோளறு பதிகம் 11 பாடல்களையும் பாராமல் முழுக்கப் பாடியவர் அவர். ஏராளமான பட்டங்களைப் பெற்றவர் அவர். அவற்றை என்னால் திரும்பச் சொல்ல முடியாது. திருமுறை மாநாட்டை நடத்தியவர்.


திரு. கருணாநிதிக்கு மனைவி அமைந்தது ஒரு வரம். அவர் பல்கலைக் கழகத்தைக் குடும்பமாக்கினார். அவரது குடும்பத்தை ஆண்டவன் பல்கலைக் கழகமாக்கினார். அவர் செய்த தொண்டுகளுக்கு எல்லையே கிடையாது. புலவர்கள் மிகுந்த வயிரவன் கோவிலில் புரவலரும் (திரு. கருணாநிதி) இருப்பது நமக்குப் பெருமை.

– பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம்

(தேவகோட்டையில் 8-3-96 அன்று நிகழ்ந்த முனைவர் திரு. இராம. கருணாநிதி - திருமதி அலமேலு ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா வாழ்த்தரங்கத்தில்)



கானாடுகாத்தான் திரு. சா.ராம.மு.அ. சிதம்பரம் செட்டியாரின் பேத்தியும் திரு. முத்தையாவின் புதல்வியுமான திருவளர் செல்வி வள்ளியம்மைக்கும் பள்ளத்தூர் திரு. உ.அ.உ.க.ராம.அரு. இராமசாமிச் செட்டியார் புதல்வன் திருவளர் செல்வன் அருணாசலத்திற்கும் 26–1–96 அன்று சென்னை அடையாறு ஹவுஸில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



மேற்படி திருமண வரவேற்பு விழாவில் மணமக்களுடன் (இடமிருந்து வலமாக) திரு. சா.ராம.மு.அ. சிதம்பரம் செட்டியார் திருமதி அபிராமி ஆச்சி திரு. அ.சி. முத்தையா திருமதி தேவகி முத்தையா



மேற்படி திருமண விழாவில் மணமக்களுடன் (இடமிருந்து வலமாக) திருமதி சிட்டாள் அருண் செட்டி. திருமதி உமையாள் இராமநாதன், திருமதி மீனா சோம சுப்பிரமணியன் (மகள் லீலாவுடன்) திருமதி பார்வதி இராமசாமி, திரு. அரு. இராமசாமிச் செட்டியார், திரு. இராமநாதன், திரு. அருண் செட்டி, மற்றும் குழந்தைகள் விஜய் அருண் செட்டி, விசாலி இராமநாதன், ராதா சோம சுப்பிரமணியன்



மேற்படி திருமண விழாவில் மணமக்களுடன் (இடமிருந்து வலமாக) திரு. ஜவஹர் வடிவேலு, திருமதி அபிராமி, குழந்தை நிரந்தரா என்ற அலமேலு, திருமதி தேவகி முத்தையா, டாக்டர் திரு. அ.சி. முத்தையா, திரு. அஸ்வின் முத்தையா, குழந்தை தேவகி, திருமதி வள்ளி அஸ்வின்

பாஞ்சாலங்குறிச்சியும், கோட்டையூரும்!

குழந்தைகளுக்கு வீரம் உண்டாக வேண்டும் என்பதற்காக எப்படி பாஞ்சாலங்குறிச்சி மண்ணை நீரில் இட்டு ஊட்டுவார்களோ அதுபோல சிறந்த கல்வி பெற வேண்டும் என்பதற்காக கோட்டையூர் மண்ணை நீரில் இட்டு ஊட்ட வேண்டும்.

– வி.என். சிதம்பரம் செட்டியார்

(கோட்டையூரில் 24-2-96 அன்று நடைபெற்ற முத்தையா அழகப்பா மேனிலைப் பள்ளி நிறுவனர் நாள் விழாச் சிறப்புரையின்போது. . .)

மதுரை சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்

மதுரை நகரத்தார் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் 18-3-96 மாலை நகர விடுதியில் துணைத் தலைவர் திரு. எவர்பிரைட் நாச்சியப்ப செட்டியார் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர்களில் ஒருவரான திரு. ஆர். சொக்கலிங்கம் வரவேற்றுப் பேசினார்.

திருப்பரங்குன்றம் நகர விடுதியில் உள்ள மரகத விநாயகருக்குத் திருப்பணி செய்து குட நீராட்டு விழா நடத்துவது என்றும் அதைப் பொதுக் குழுவின் ஒப்புதலுடன் செய்வது என்றும் தீர்மானிக்கப் பெற்றது.

மற்றொரு செயலாளர் திரு. லெ.மு.மு. முத்துமாணிக்கம் நன்றி கூறினார்.

கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

மஞ்சளும் குங்குமமும்

நமது புண்ணிய பாரத தேசத்துப் பெண்களின் அணிகலன்களுக்கெல்லாம் அழகூட்டுவது குங்குமம். ஒவ்வொரு பெண்ணுக்கும் பிறக்கும்பொழுதே இருபுருவங்களுக்குமிடையே கணவனுக்குத் தீங்கு செய்யக்கூடிய தீய சக்தி ஒன்று வசிப்பதாக நமது வேதம் கூறுகிறது. இதன் காரணமாகவே மங்களகரமான மஞ்சளினாலான குங்குமத்தை நெற்றியின் நடுவில் இட்டுக் கொள்ளும் பழக்கம் நம் பெண்களுக்கு இருந்து வருகிறது.

இந்தக் குங்குமத்தினால் அங்கு வசிக்கும் தீய சக்தியால் ஏற்படக்கூடியதாகக் கருதப்படும் தீமைகள் விலகி நீண்ட ஆயுளும், சகல பாக்கியங்களும் அமையும். அதிலும் அன்னை பராசக்தியின் திருவடிகளில் அர்ச்சனை செய்த குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொள்வதால் (ஆண்களும் இட்டுக் கொள்ளலாம்) பிறவியின் பொழுது பிரம்மாவினால் தலையில் எழுதப்பட்ட தீய எழுத்துகள் அழிந்து நன்மைகளும் நற்பலன்களும் கிட்டும் என்பது இந்துமத நம்பிக்கை. இதற்காக, கண்ட கண்ட வண்ணப் பொடிகளை நெற்றியில் இட்டுக் கொள்வதைத் தவிர்த்து, விசேடமாக அவரவர் இல்லங்களிலேயே தூய மஞ்சளைக் கொண்டு தயார் செய்யும் நல்ல குங்குமத்தையே பயன்படுத்த வேண்டும்.

இதேபோல் நம் இல்லங்களுக்கு வருகைதரும் சுமங்கலிப் பெண்களுக்கு, அவர்கள் விடைபெறும் பொழுது வெற்றிலை, பாக்குடன் மஞ்சள் கிழங்கையும் அளித்து விடை கொடுத்தனுப்புவது நம் பழக்கம். இதன் விளைவாக பாக்கியங்கள் பெருகும். பாபங்கள் அகலும், நோய்கள் தீரும். நலமான நல்வாழ்வு அமையும்.



செய்திகள்

வாசிப்பவர்: எல். சுந்தரம்

★ இரசிகமணி திரு. இராம. சிதம்பரம் செட்டியார் - திருமதி முத்தம்மாள் ஆச்சியின் பீமரத சாந்தி 8-6-96 அன்று கொ. லெட்சுமிபுரத்தில் நடைபெற உள்ளது.

★ 12 திருமுறைகள் அடங்கிய திருமுறைக் கோவில் அமைப்பு ஒன்றை பலவான்குடி திரு. வே. நாச்சியப்ப செட்டியார் வயிரவன் கோவிலுக்கு 4-2-96 அன்று உபயமாக வழங்கினார்.

★ மதுரை வங்கியின் காரைக்குடி மண்டலத்தில் உள்ள கிளைகளுக்கிடையே நடைபெற்ற சதுரங்கம், கேரம் ஆகிய போட்டிகளில் பொன்னமராவதிக் கிளையில் பணியாற்றும் திரு. விசு. செல்வராசன் முதல் பரிசு பெற்றுள்ளார்.

★ மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் ஏழாம் ஆண்டு இலக்கிய விழா 28-4-96 மாலை மதுரை வடக்கு ஆடி வீதியில் உள்ள திருவள்ளுவர் கழகத்தில் நடைபெறும். மேற்படி விழாவில் 30-3-96 அன்று நிகழ்ந்த ஏழிளந்தமிழ் எழுதும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெறும்

★ தஞ்சை இதயகீதம் இலக்கிய பொதுநல சங்கமும் இதயகீதம் கலைச்சுரபி திரைப்பட கலைக் காவியமும் இணைந்து நடத்திய மாநாட்டில் விரையாச்சிலை கவிஞர் திரு. ஏஎன். சிதம்பரத்தின் இலக்கியச் சேவையைப் பாராட்டி அவருக்கு 'கவியருவி' என்ற சான்றிதழ் வழங்கப் பெற்றது.

★ காரைக்குடி கம்பன் திருநாள் 1-4-96 முதல் 3-4-96 வரை காரைக்குடி கம்பன் மணி மண்டபத்திலும் 4-4-96 அன்று நாட்டரசன்கோட்டையிலும் சிறப்பாக நடைபெற்றது.

★ தேவகோட்டை அருள்மிகு கோதண்ட இராமசுவாமி திருக்கோவிலின் திருவிழா 28-3-96 முதல் 7-4-96 வரை நடைபெற இருக்கிறது.

எங்கள் தந்தையார்

மீனா தமிழரசி முத்து வீரப்பன்

சிங்கார வடிவேலன் எங்கள் அப்பா
செந்தமிழன் சிந்தனையில் சிறந்த ஊற்று;
பொங்கிவரும் அலையைப்போல் அப்பா வாயில்
பொன்னாக மணியாகக் கவிதை கொட்டும்;
தங்குதடை இல்லாத வார்த்தை வெள்ளம்
தரமான அப்பாவின் பாட்டைக் காட்டும்;
மங்காத புகழ்பெற்று எங்கள் அப்பா
மாண்புடனே பலகாலம் வாழ்க நீடு!

எவருக்கும் அஞ்சாதார் எங்கள் அப்பா
எதனையுமே நேரினிலே கேட்டே தீர்வர்
தவறுகளை ஒருசிறிதும் தாங்க மாட்டார்
தரமில்லாச் செயல்களினைச் செய்ய மாட்டார்
சிவப்பான அழகான அம்மா வோடு
சேர்ந்தேதான் எம்மப்பா எங்கும் செல்வார்
உவப்புடனே இருவருமே புகழ்ச்சி யோடு
உயர்வால் பல்லாண்டு வாழ்க! வாழ்க!

வள்ளி.கலா. கண்ணாவாம். பழநி யப்பன்.
பாட்டெழுதும் தமிழரசி. முத்து என்ற
பிள்ளைகளாம் எங்களினை அப்பா நல்லார்
பிரியமுடன் நன்றாக வைத்துக் கொள்வார்
நல்லநல்ல மணமகனாய்த் தேர்ந் தெடுத்து
நால்வரெங்கள் திருமணமும் முடித்து விட்டார்
எல்லையிலாத் திறமைகொண்ட எங்கள் அப்பா
எங்கேயோ இருப்பதற்கு இங்கே உள்ளார்!

ஆண்களிலே ஒருவனுக்கு மணம் முடித்தார்
அழகான ஒரு தம்பி படிப்பில் உள்ளான்
தேன்போலப் பாட்டெழுதும் அரசி அப்பா
தினம்சென்ற பணி ஓய்வும் பெற்று விட்டார்
வான்போல மலைபோல உயர்வு பெற்று
வளர்மனையில் அற்புதமாம் சாந்தி செய்து
தீண்டுகிற சிறுபிணிகள் தூசாய் மாறித்
தினந்தோறும் மகிழ்ச்சியிலே திளைத்து வாழ்க!

பதினேழாம் ஆண்டு நினைவாஞ்சலி



தோற்றம்:
11-09-1927

மறைவு:
25-04-1979

திருமதி இராம. மெய்யம்மை ஆச்சி

முன்னாள் இயக்குநர்: ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்

ஆண்டுகள் பதினேழு அகன்றன தாயேநின்
நினைவுகள் என்றும் நீங்கா – நினைவொடு
கண்ணீர் பெருகிட கால்மலர் தன்னில்
நினைவில் அஞ்சலி நல்குதும்

என்றும் தங்கள் நினைவைப் போற்றும்

மகன் இராம. அருணாசலம், மருமகள், மகள்கள்
மருமகன்கள், பேரப் பிள்ளைகள் மற்றும்
ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட் அலுவலர்கள்

பெருமைக்குரிய அரசி

- பெருங்கவிஞர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் முறையாகத் தமிழ் கற்றவர்.
- தமிழ்க் கவிதைகளில் மனம் தோய்ந்தவர்.
- உவமை அணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தாம் பாடும் கவியரங்குகளில் உவமைகளைச் சரளமாகக் கையாளும் திண்மை பெற்றவர். எனவே தனது ஆய்வுக்கு சங்க இலக்கிய உவமைகளைப் பொருளாக எடுத்துக் கொண்டார்.
- கூர்ந்த மதி நுட்பம் உடையவர். அந்த மதிநுட்பம் அவரது நிருவாகப் பணிகளில் பளிச்சிடும்.
- ஆலயக் குடநீராட்டு விழாக்களுக்கும், இல்லத்து விழாக்களுக்கும் இவர் பொறுப்பேற்று தயாரித்த சிறப்பு மலர்கள் பெருஞ் சிறப்பு வாய்ந்தவை.
- குறள், அபிராமி அந்தாதி, பத்துப்பாட்டு, தொல்காப்பியம், அகத்திணை ஆகிய பல நூல்களின் உரையாசிரியர் இவர்.
- நான் கல்வி கற்ற காலங்களில் தனக்குப் பேருதவி செய்த பேராசிரியர்கள் திரு. சுப்பு ரெட்டியார் திரு. வ.சுப.மா., தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்றோரை நினைத்து நினைத்து நன்றி பாராட்டும் நன்னெஞ்சர்.
- ஆங்கிலத்திலும் அருமையான திறம் பெற்றவர். சில முக்கிய மொழிபெயர்ப்புப் பணிகளையும் செய்து கொண்டிருக்கிறார்.
- நூலாக்கப் பணிகளை இவரிடம் ஒப்படைத்தால் அவை சிறப்பாக அமையும்.
- 'வாழ்க வையகம் - வாழ்க வளமுடன்' எனக் கூறும் நல்ல மனிதர் இவர்.

மு. பழனி – இராகுலதாசன்
தேவகோட்டை

அபூர்வ மாப்பிள்ளை!

இப்பள்ளியின் நிறுவனரும் எனது மாமனாரும் ஆன திரு. எம்.ஏ.எல். அழகப்பச் செட்டியார் அவர்களுக்கு நான் அளித்த வாக்கின்படி இப்பள்ளியை எனது இறுதிநாள் வரை திறம்பட நடத்தி வருவேன்.

– எஸ்பி. சுந்தரகேசரி

"உங்கள் மகளை இறுதிவரை காப்பாற்றுவேன்' என்று மருமகன்கள் மாமனார்களுக்கு உறுதி கூறுவது வழக்கம். ஆனால் 'உங்கள் மகளை மட்டும் அல்ல; நீங்கள் நிறுவிய பள்ளியினையும்-இறுதிவரை காப்பாற்றுவேன்" என உறுதியளித்த ஒரே மாப்பிள்ளை திரு. சுந்தரகேசரி அவர்கள் தான்.

– வி.என். சிதம்பரம் செட்டியார்

(கோட்டையூர் முத்தையா அழகப்பா மேனிலைப் பள்ளியில் 24-12-96 அன்று நடைபெற்ற பள்ளியின் நிறுவனர் தின விழாவில்)

'விசா' பெறுவதில் வெற்றி பெற.....

(தி. இராமநாதன் - திருச்சி)

- 4 -

நண்பர்களே, இந்த இதழில் H1 விசா பற்றி முதலில் விரிவாகத் தெரிந்து கொள்வோம். H1 வகை விசா உங்களை அமெரிக்காவில் சட்டப்படி வேலைபார்க்க அனுமதி அளிக்கிறது. எந்த நிறுவனம் உங்களை அழைத்து H1 விசா வாங்க விண்ணப்பித்தீர்களோ அந்த நிறுவனத்தில் மட்டுமே வேலையில் சேர அனுமதிக்கப்படுகிறது. வேலையில் மாற்றம் செய்ய நினைத்தால் புதிய H1, விசாவிற்கு விண்ணப்பித்துப் பெற வேண்டியது அவசியமாகும். இந்த விசா கண்டிப்பாக மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். மூன்று ஆண்டு காலத்திற்குப்பின் திரும்பி வரவிருப்பதாகக் கூற வேண்டும். உங்கள் குடும்பத்தினரை உடன் அழைத்துச் செல்லலாம். அவர்களுக்கு வழங்கப்படும் விசாவிற்கு H4 விசா என்று பெயர். ஆனால், அவர்கள் அங்கு தங்கும் காலத்தில் சட்டப்படி எந்த வேலையிலும் சேர்ந்து பணம் ஈட்டக் கூடாது. H1 விசா பொதுவாக Multiple Entry Visa வாகவே வழங்கப்படுகிறது. எனவே இந்த விசா காலம் முடியும் வரை எத்தனை முறை வேண்டுமானாலும் யூ.எஸ்.ஏ.க்கு சென்று திரும்பி வரலாம்.



அமெரிக்காவில் உங்களுக்கு வேலை கிடைத்தால் H1 விசா பெறுவது இரண்டு கட்டங்களில் நடைபெறுகிறது.

முதல் கட்டம்: அமெரிக்காவில் உள்ள INS சென்டரில் உங்கள் எம்ப்ளாயர் உங்களுக்குக் குறிப்பிட்ட சம்பளம் கொடுக்க போதிய வசதி தனக்கு உண்டு என்பதையும், உங்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வது மிகவும் அத்தியாவசியமானது என்பதையும் நிரூபிக்க வேண்டும்.

இரண்டாவது கட்டம்: முதல் கட்டத்தில் உங்கள் விண்ணப்பம் வெற்றி பெற்றால் நீங்கள் அமெரிக்காவில் வேறு விசாவில் தங்கி இருந்தால் அங்கேயே உங்கள் H1 விண்ணப்பத்தை நிறைவு செய்து கொடுக்கலாம். இந்தியாவில் இருப்பவராக இருந்தால் இங்கேயே யூ.எஸ். கன்சல்ட்டேட்டில் விண்ணப் பிக்கலாம். H1 விசா முத்திரை வெளிநாட்டு கன்சல்ட்டேட் அலுவலகத்தில்தான் போடப்படும். ஆதலால் விசா மாற்றுவதாக இருந்தால் கூட நீங்கள் திரும்பவும் இந்தியா வந்து இங்குள்ள கன்சல்டேட்டில் H1, முத்திரை போட்டுக் கொண்டு மீண்டும் அமெரிக்கா போக வேண்டி வரும். எனவே விசா மாற்றத்திற்கு விண்ணப்பிப்பதை விட இந்தியா திரும்பி வந்து இங்கிருந்து H1 விசாவிற்கு விண்ணப்பிப்பது எளிது.

நிறைவு செய்ய வேண்டிய விசா டாகுமெண்ட்ஸ் விபரங்கள்

1) Form I 129 B - உங்களைப் பற்றிய தகவல்
2) Employer ன் சொத்து விபரம், பேங்க் ஸ்டேட்மெண்ட், டாக்ஸ் கட்டிய அத்தாட்சிகள்
3) Employer க்கும் உங்களுக்கும் எழுத்து மூலம் உள்ள வேலை சம்பளத்திற்கான ஒப்பந்தம்.
4) உங்களுடைய முழு படிப்பு விவரம், சான்றுகள்
5) தற்போது வேலை செய்கிற இடத்திலிருந்து உங்களைப் பற்றிய நற்சான்றுப் பத்திரங்கள்
6) வேலைக்குத் தேவையான, யூ.எஸ்.ஏ. யில் அங்கீகரிக்கக்கூடிய லைசன்ஸ் கள் ஏதுமிருந்தால் அவை தேவை. (உதாரணமாக நர்ஸ் வேலைக்கு U.S.A. Commissions on Graduate Foreign Nursing School Exam பாஸ் செய்திருக்க வேண்டும்.)

இரண்டாவது கட்டத்தில்

1) OF-156 விசா விண்ணப்பப் படிவம்
2) பாஸ்போர்ட் (குறைந்தது அடுத்த 6 மாதத்திற்கு Valid ஆக இருக்க வேண்டும்)
3) 6 பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள்
4) இந்தியாவில் நீங்கள் விட்டுச் செல்லும் சொத்துக்கள் விவரம்.
5) காண்ட்ராக்ட் முடிந்து இந்தியா திரும்பினால் இங்கு உங்களுக்குத் தயாராக ஏதேனும் வேலை காத்திருக்கிறதா என்பதற்கு அத்தாட்சி

6) உங்கள் மனைவி பிள்ளைகளை அழைத்துச் செல்ல விரும்பினால் திருமணப் பதிவுச் சான்று. பிறப்புச் சான்று முதலியவை.

H1 விசாதாரர்கள் க்ரீன் கார்டுக்கு விண்ணப்பிக்கலாமா? ஆம். விண்ணப்பிக்கலாம். ஆனால் நீங்கள் இரண்டு விவரங்களில் அரசாங் கத்தைச் சமாளிக்க வேண்டும்.

1) உங்களுக்கு H1 விசா பெறும்போது க்ரீன் கார்டு அடையும் நோக்கம் இருந்திருக்கவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும்.

2) H1 விசா முடியும் காலத்திலும் உங்களுக்கு க்ரீன் கார்டு கொடுக்கப் படா விட்டால் சுணங்காமல் தாயகம் திரும்புவீர்கள் என்பதற்கும் சான்று காட்ட வேண்டும்.

க்ரீன் கார்டு பெற விண்ணப்பிப்பவர்கள் நன்மைக்காக மேலும் சில Terminology களைத் தெரிந்து கொள்வோம்.

Perference Category தனிநபர்கள் யாரேனும் தனித்துவ முன்னுரிமை வகையில் ஒருவராயிருந்தால் க்ரீன்கார்டு ஆண்டுப் பங்கு முறையில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. Quota System ல் அனுமதிக்கும் அளவு ஆண்டுக்கு ஆண்டு மாறுபடும். இதில் 7 வகைகள் உண்டு.

முதல் முன்னுரிமை: அமெரிக்க பிரஜைகளில் மணமாகாத மகன்களும், மகள்களும்.

இரண்டாவது முன்னுரிமை: க்ரீன் கார்டு உடையவர்களின் கணவன் அல்லது மனைவி மற்றும் மணமாகாத மகன்கள், மகள்கள்.

மூன்றாவது முன்னுரிமை: தொழில் திறமையாளர்கள் (Professionals) மற்றும், விஞ்ஞானம் , கலை, கல்வியில் மேலான தனித் திறமை வாய்ந்தவர்கள். லேபர் சர்டிபிகேட் பெற்று அமெரிக்க நிறுவனங் களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 'அவசியம்' எனக் கருதப்படுபவர்கள்.

நான்காவது முன்னுரிமை: அமெரிக்க பிரஜைகளின் திருமணமான மகன்களும், மகள்களும்.

ஐந்தாவது முன்னுரிமை: அமெரிக்க பிரஜைகளின் சகோதர சகோதரிகள், 21 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்

ஆறாவது முன்னுரிமை: யூ.எஸ்.ஏ.ல் வேலை கிடைத்து லேபர் சர்டிபிகேட் பெற்று. திறமை அடிப்படையில் அல்லது திறமை அடிப்படை அல்லாத வேலையாட்கள்; (மேலும் அவர்களின் வேலை நிரந்தரமானதாயும். பருவகால அடிப்படையில் இல்லாததாகவும்; மேலும் அத்தகைய வேலை செய்ய அமெரிக்காவில் யாரும் இல்லை என்ற நிலையோ அல்லது குறைவான பேர்களே இருக்கிறார்கள் என்ற நிலையோ இருக்க வேண்டும்.)

ஏழாவது முன்னுரிமை: அமெரிக்க ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட அரசியல் அடைக்கலம் கோருவோர் அல்லது அறிவிக்கப்பட்ட இயற்கைப் பகுதிகளிலிருந்து அடைக்கலம் கோருவோர்.

Priority Date க்ரீன் கார்டுக்கு நீங்கள் விண்ணப்பிக்கும் தேதி. இந்தத் தேதி உங்கள் வெயிட்டிங் லிஸ்ட் நம்பரை நிர்ணயிக்க உதவும் தேதியாகவும் பயன்படுத்தப் படுகிறது.


Quota இந்த முறையில் க்ரீன்கார்டு பெறுவோர்கள் உலகெங்கிலும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2,70,000 பேர். ஒரு தனி நாட்டுக்கு 25,000 பேருக்கு மேல் இந்த முறையில் (ஆண்டொன்றுக்கு) அனுமதிப்பதில்லை. அதற்கு மேல் வரும் விண்ணப்பங்கள் வெயிட்டிங் லிஸ்ட்டில் இருப்பதால் தான் க்ரீன் கார்டு கிடைக்க பல ஆண்டுகள் கூட ஆகின்றது.

Special Immigrant பல. சமயங்களில் மத சம்பந்தப்பட்ட பெரியோர் மற்றும் அமெரிக்க அரசாங்க வேலை பார்த்தவர்கள். அமெரிக்காவில் பல்லாண்டு மருத்துவர் வேலை பார்த்த வெளிநாட்டு டாக்டர்கள் முதலானோருக்கு Quota System ல் வராமல் தனிப்பட்ட முறையில் க்ரீன் கார்டு வழங்கப்படும். அவர்கள் ஸ்பெஷல் Immigrants எனப்படுவர்.

Sponsor ஆதரிப்பாளர்கள் - அமெரிக்க பிரஜைகளாகவோ அல்லது க்ரீன் கார்டு உடையவர்களாகவோ அல்லது அமெரிக்க எம்ப்ளாயர்களாகவோ. Petition மூலம் ஸ்பான்சர் செய்யத் தயாராக உள்ளவர்கள்.

(அடுத்த இதழில் முடிகிறது.)

இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மறைவு: 3-4-1994

ராம.சொ. சுந்தரம் செட்டியார்

அலவாக்கோட்டை

1994 ஆம் ஆண்டு அகால மரணமடைந்து எங்களை மீளாத் துயரத்தில் ஆழ்த்திச் சென்றுள்ள எங்கள் இதயம் கவர்ந்த உங்களுக்கு எங்கள் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

சு. பார்வதி ஆச்சி - மனைவி

மகன்:
முருகப்பன்

மருமகள்:
சாந்தி

மகள்:
வசந்தி

மாப்பிள்ளை:
கண. சுப்பிரமணியன்

பேரன்:
S. செந்தில் குமார்

சுப. சித. ராம.சொ.சு. இல்லம்
அலவாக்கோட்டை
பசும்பொன் தேவர் மாவட்டம்

உ சிவமயம்

வாழிய வாழிய பல்லாண்டு!

கண்ணம்மை அரங்கநாதன் D.Pharm.

காப்பு

பிள்ளாய்! விநாயகனே! பேணுமெங்கள் கற்பகமே!
வள்ளல் குணமுடையாய்! வணங்கியுமைப் போற்றுகிறேன்
பிள்ளையென்றால் பெற்றோரின் பெருமைதனை யான்பாடத்
தெள்ளு தமிழுதவித் தேவேநீ காப்பவாய்!



எங்கள் அப்பா சிங்காரம்
என்னும் இனிய வடிவேலர்
சிங்கம் போன்று நிமிர்ந்தநடை
சிரித்த பூப்போல் அன்புமுகம்
தங்கம் அவர்கள் நல்லமனம்
தரமே அவர்கள் உயர்ந்தகுணம்
எங்கள் தவமே இத்தந்தை
எமக்குக் கிடைத்த பெரியவரம்

அப்பா மிகுந்த அறிவாளி
அதிகம் படித்த படிப்பாளி
ஒப்பே இல்லா மதியூகி
உழைப்பால் உயர்ந்த பாட்டாளி
தப்புச் செய்வோர் எதிராளி
தாழ்ந்தோர் உயர உழைப்பாளி
(அவர்) செப்பும் கவிபோல் நீடுழி
சிறப்பாய் என்றும் அவர்வாழி!

எங்கள் தந்தை பெருங்கவிஞர்
இனிக்கும் அவரின் தமிழ்ப்பாட்டு
வங்கக் கடலின் அலைபோல
வாயில் இருந்து கவிகொட்டும்
தங்கத் தமிழ்மகள் அவரிடத்தே
தழுவித் தங்கி மகிழ்கின்றாள்
அங்கம் எல்லாம் தமிழ் மணக்கும்
அப்பா வாழிய பல்லாண்டு!

பெருமான் முருகன் பெருமைகளைப்
பெருமை மிக்க தமிழெடுத்துப்
பருகப் பருகத் தெவிட்டாத
பாட்டாய் ஆக்கித் தந்துள்ளார்.
கருப்பர் எங்கள் குலதெய்வம்
கடுகி அவரின் துணையிருப்பார்
முருகன் கருப்பர் அருள்பெற்று
முக்தி அடைந்தே வாழியவே!

அழகு என்றால் சிங்காரம்
அப்பா என்றால் அழகேதான்
அழகு என்னும் எம்மம்மா
அப்பா அன்பு மனையரசி
அழகும் அழகும் சேர்ந்ததுடன்
அன்பு சேர்ந்து இனிக்கிறது
இளகும் மனத்தார் இருவருமே
இனிதே வாழிய பல்லாண்டு

நோயால் அப்பா இன்றைக்கும்
நொந்தே வருந்தி வாழ்ந்தாலும்
தாய்போல் பிறர்க்கு உதவுவதால்
தாயும் அவர்துணை நிற்பதனால்
சேய்கள் நாங்கள் அறுவருமே
சிறப்பாய் இன்று வாழ்கின்றோம்
வாயால் நாங்கள் அவர்களையும்
வாழ்த்தி வணங்கி மகிழ்வோமே!

நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:
23-2-1927



மறைவு:
22-4-1992

இந்தியன் நேவியின் ஓய்வு பெற்ற அதிகாரியும்
மதுரை பிரபல நூல் வணிகரும்
நூல் வணிகர்கள் சங்கத்தின் கௌரவச் செயலாளரும்
ஸ்ரீ வேல்முருகன் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளருமாகிய

ஒக்கூர்

மு.சே. இராமநாதன் செட்டியார்

அவர்களின் திருப்பாதங்களுக்கு அஞ்சலி செலுத்தி
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இராம. ருக்மணி ஆச்சி – மனைவி

மகன்கள்:
இராம. கனகராஜன்
இராம. ஸ்ரீதரன்

மருமக்கள்:
க. இராஜேஸ்வரி
ஸ்ரீ. மீனாள்

மகள்:
இராம. நிர்மலா

மருமகன்:
சே. கண்ணப்பன்

பேரன்கள்:

க. அசோக்குமார்
க. ஆனந்த்
ஸ்ரீ. ராம் சரவணன்
க. தினேஷ்

பேத்தி: ஸ்ரீ. ராம்ருக்மணி

இராமநாதன் இல்லம், 343 MIG, எண்பது அடி ரோடு,
அண்ணாநகர், மதுரை – 625 020.

மாசி மகத்திற்குப் பாத யாத்திரை

பொள்ளாச்சி நகரத்தார் மாதாந்திர கார்த்திகை அபிஷேகக் குழுவின் சார்பில் நான்காம் ஆண்டாக மாசி மகத்திற்கு 2-3-96 சனியன்று மாலை 4 மணி அளவில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலிலிருந்து நகரத்தார் ஆண்களும் பெண்களுமாக சுமார் 50 பேர் பாதயத்திரையாகப் பழநி சென்றனர். 4-3-96 மாசி மகத்தன்று அருள்மிகு தெண்டாயுதபாணிக்கு அபிஷேகம் செய்து அன்னதானம் வழங்கினார். திருவாளர்கள் கே.ஆர். லெட்சுமணன். ஆர்.எம். முத்துக்கருப்பன். எஸ்.பி. வள்ளியப்பன் ஆகியோர் வழி நடத்திச் சென்றனர்.

சண்முகருக்கு அபிஷேகம்

பொள்ளாச்சி ஐயப்பன் கோவிலில் உள்ள சண்முகருக்கு மாதந்தோறும் கார்த்திகையன்று பொள்ளாச்சி வாழ் நகரத்தார்கள் ஒன்று சேர்ந்து அபிஷேகம் செய்து வருகிறார்கள். 25-2-96 அன்று ஞாயிறு காலையில் அபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

இயற்கை எய்தினார்

சோழபுரத்தைச் சேர்ந்த திரு.கும.சே. திருஞானம் என்கிற சேதுராமன் செட்டியார் தமது 57 ஆவது வயதில் 11-3-96 இரவு 8 மணி அளவில் மதுரையில் இயற்கை எய்தினார். இவருக்கு மனைவியும் இரண்டு புதல்வர்களும் மூன்று புதல்விகளும் உள்ளனர்.

மணமகன் தேவை

திருமணம் ஆகி சில நாட்களில் விவாகரத்தான வயிரவன் கோவிலைச் சேர்ந்த 29 வயதுடைய - தற்பொழுது வேலை பார்த்து வரும் அழகான பெண்ணிற்கு மணமகன் தேவை. விருப்பமுடையோர் ஜாகத்துடன் தொடர்பு கொள்க.

பெட்டி எண்: 241
C/o "நகரத்தார் குரல்"
108, 109 நேதாஜி ரோடு
மதுரை – 625 001

வி.என்.சிடி. யை வாழ்த்தி - வெண்பா

என்னைப் பொருளாக்கி ஏற்றங்கள் தந்துள்ள
பொன்னார் சிதம்பரத்தைப் போற்றுகின்றேன் - என்றென்றும்
செந்தமிழைக் காக்கின்ற மீனாட்சி சீர்மைந்தர்
சந்ததமும் வாழ்! தழைத்து — பேராசிரியர் கதி. சுந்தரம்

சுந்தரனார் வாழ்க சிறந்து

ஆலம் விழுதெனவே ஆயிரமாய் மாணவர்கள்
ஞாலம் முழுவதும் உமக்குளிராம் - சீலமுடன்
சிந்தையிலே கம்பரை வள்ளுவரை வைத்துள்ள
சுந்தரனார் வாழ்க சிறந்து. — கவிஞர் கோமகன்

சிவநெறிச் செம்மல் திரு. சி. இராம. நாகப்ப செட்டியார்
தந்தை நினைவதிகம் சான்றோர் துணையதிகம்
சொந்த விருந்ததிகம் சொல்கின்றேன் - சந்ததமும்
ஈயும் நிதியதிகம் எம்இனிய நாகப்பர்
ஆயும் தமிழதிகம் ஆல். — பேராசிரியர் கதி. சுந்தரம்

எங்கள் அன்புத் தெய்வத்தின்

மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



SP. கண்ணாத்தாள்

மறைவு நாள்: 24-3-93

RM. சுப்பிரமணியன் (கணவர்)
திருமதி ஜெயலெட்சுமி சுப்பிரமணியன்

SP. நாச்சம்மை (மகள்) SP. மீனாட்சி (மகள்)
SP. உத்தமன் (மகன்)

அலவாக்கோட்டை, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20. கிருஷ்ணாபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009-ல் அச்சிட்டு நடராஜ் அண்ணாமலை அவர்களால் 108-109, நேதாஜி ரோடு, மதுரை-625 001-லிருந்து வெளியிடப் பெறுகிறது.

ஆசிரியர்: **வி.என். சிதம்பரம்.**

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
11-4-1911



மறைவு:
24-4-1993

தொண்டர் நா. அருணாசலன்

கண்டவராயன்பட்டி

தண்டமிழ் புலவர் போற்றும்
தருமபரம் பரையின் தோன்றல்
வண்டென உழைக்கும் தன்மை
வாழ்வாகக் கொண்ட தொண்டன்
பண்டு பேரறங்கள் செய்த
பழகரு மரபில் வந்தோன்
எண்டிசை போற்றும் அன்பர்
அருணாசலன் நீ வாழ்க!

- புலவர் மு. வள்ளியப்பா
(காங்கிரசுத் தியாகி)

கற்பகநல் விநாயகரைக் காதலுடன்
கசிந்துருகிக் கனிந்து போற்றி
பற்பலவாம் இனியபல பணிசெய்து
பிள்ளையார் பட்டிக் கோவில்
பொற்புடைய வரலாற்றில் தனக்கெனஓர்
இடம்கண்ட புகழின் செல்வர்
நற்பெருமை கொண்ட அருணாசலப்பேர்
திருதமொண்டர் நாமம் வாழ்க

- கவிஞர் சே. கனகசபை பி.ஏ.

அரு. நாராயணன் (எ) ராமு
நா. நல்லம்மை
நா. அருணாசலன் (பேரன்)

ஸ்ரீ கற்பகவிநாயகர் அன்கோ
232 வானகரம் ரோடு
அத்திப்பேட்டை, அம்பத்தூர் எஸ்டேட்
சென்னை-600 058